**தலைப்பு 265 –மன்னார் மாவட்டச் செயலகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மன்னார் மாவட்ட செயலகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் மன்னார் மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளையும் அவதானிப்புக்களையும் உள்ளடக்கிய பொழிப்பறிக்கை 2022 யூன் 22 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகம் தொடர்பான விரிவான வருடாந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 ஆகஸ்ட் 16 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாரளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மன்னார் மாவட்ட செயலகத்தின்நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் ஆகியன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுசட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மன்னார் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மன்னார் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான உரிய மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

நிதிக்கூற்றுக்கள், ஒட்டுமொத்தமாக மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது இவ் விடயம் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது, மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் என்பவை பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(ஈ) உப பிரிவின் பின்வரும் விடயங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னையை ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) முன்னைய ஆண்டுக்குரியதாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் திறைசேரியின் மொத்த செலவீன அறிக்கையின் பிரகாரம் மீண்டெழும் செலவீனம் மற்றும் மூலதன செலவினங்களின் ரூபா 244,770 வீதம் இணங்காத வேறுபாடு காணப்பட்டது. | எதிர் வரும் காலங்களில் இவ்வாறான செயற்பாடுகள் ஏற்படாவண்ணம் நடவடிக்கை மேற்கொள்வதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | கணக்குக் கூற்றுக்களில் உள்ள இலக்கங்களை உபயோகப்படுத்தி தகவல்களுடன் இணக்கம் செய்யப்பட்டு உண்மையான மீதிகளை கணக்குகளில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மூலதன சொத்துக்களின் புனரமைப்பும் மேம்படுத்தலுக்குமாக செலவு ரூபா 5,819,399 மற்றும் 2625 சதுர அடியை கொண்ட மாவட்ட செயலக வளாகத்தின் உள்ள கட்டடங்களின் பெறுமதி நிதியல்லாத சொத்துக்களாக கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | மூலதன செலவுகள் தொடர்பான தவறினை பொதுத் திறைசேரியுடன் கலந்துரையாடுவதற்கும், கட்டடங்களின் பெறுமதியை மதிப்பிட்டு கணக்கிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | சொத்துக்கள் சரியாக கணக்கிடப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டு நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திறைசேரியினால் ரூபா 53,744,588 தொகையான அங்கீகரிக்கப்பட்ட மூலதன ஏற்பாட்டினை பயன்படுத்துவற்கு முடியாமல் போனமை காணப்பட்டது. | கோரப்பட்ட கட்டுநிதி முழுமையாக கிடைக்கப் பெறாமையினால் நிதி ஏற்பாட்டினை முழுமையாக பயன்படுத்த முடியவில்லை. பற்றாக்குறை காரணமாக | கிடைக்கப் பெற்ற கட்டுநிதியை உச்ச அளவில் பயன்படுத்த வேண்டும். |

### 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் 21 எண்ணிக்கையான செலவின விடயங்களுக்கான நிதி ஏற்பாடுகள் சேமிப்பு ரூபா 72,757,322 ஆக காணப்படுவதுடன் அது தேறிய ஏற்பாட்டில் 06 சதவீதம் தொடக்கம் 100 சதவீதம் வரையான வீச்சில் உள்ளது. | தேவையான கட்டுநிதி கிடைக்கப்பெறாமை நிதி ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருப்பதற்கு காரணமாயிருந்தது. | கிடைக்கப் பெற்ற கட்டுநிதியை உச்ச அளவில் பயன்படுத்த வேண்டும். |
| (ஆ) | 06 செலவின விடயத்திற்காக வேறு செலவின விடயங்களிலிருந்து வகைமாற்றத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட சதவீதம் தேறிய ஏற்பாட்டில் 38 சதவீதமாக இருந்தது. | எதிர்காலத்தில் சரியான முறையில் பாதீடு தயாரிப்பதற்கு அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | மதிப்பீடுகள் சரியான முறையில் திட்டமிடப்படல் வேண்டும் |
| இ) | 05 செலவின விடயங்களுக்கு வேறு செலவின விடயங்களிலிருந்து ரூபா 5,780,000 ஏற்பாடுகள் வகை மாற்றத்தின் மூலம் மாற்றப்பட்டிருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் இவ் செலவின விடயங்களில் ஏற்பாடுகளின் சேமிப்பு ரூபா 5,911,492 வாக காணப்பட்டிருந்தது | தேவையான கட்டு நிதி கிடைக்கப்பெறாமை நிதி ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருப்பதற்கு காரணமாயிருந்தது. | -மேற்படி- |

**2.3 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளின் பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 43 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் மீளாய்வாண்டிக்காக மூலதன செலவின விடயங்களுக்காக் வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 110,113,823 அவ்வாறெனில் 09 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சளவில் சேமிக்கப்பட்டிருந்தது. அதனுள் காணப்பட்ட முழு ஏற்பாடுகளின் சேமிப்பின் பெறுமதி ரூபா 21,681,260 தொகையாக இருந்தது. | நாட்டில் ஏற்பட்ட நிதி சிக்கல்கள், பணவீக்கம், போக்குவரத்து வசதியீனங்கள், கட்டுநிதியும் கிடைக்கப் பெறாமை ஆகிய காரணங்களினால் நிதி ஏற்பாடுகளின் சேமிப்பு காணப்பட்டது. | கிடைக்கப் பெற்ற கட்டுநிதியை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 பெறுகைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| தொழினுட்ப பூங்கா, வாகன தரிப்பிடம் மற்றும் ஒன்றுகூடல் மண்டபம் நிர்மான வேலைக்காக ரூபா 50,000,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் பெறுகை வழிகாட்டியின் 4.2.1 இல் கூறப்பட்டதிற்கிணங்க விபரமான பெறுகைச் செயற்பாட்டுத் திட்டம் மற்றும் பெறுகை வழிகாட்டியின் 4.2.3 இன் பிரகாரம் பெறுகைக்கான அட்டவனையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இவ்வாறான தவறுகள் இனிவரும் காலங்களில் ஏற்படாதிருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது | பெறுகை நடைமுறையானது பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் மேற்கொள்ளப்பட ல் வேண்டும். |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மாவட்ட செயலகத்தின் மூன்று வாகனங்கள், உழவியந்திரம், உழவியந்திரப்பெட்டி மற்றும் 12 மோட்டார் சைக்கிள்கள் நீண்ட காலமாக பயன்படுத்தாமல் காணப்படுகிறது. | வாகனப்பதிவுப்புத்தகம் இல்லாமையே பிரதான காரணமாகக் காணப்படுகின்றது. அதை பெறுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. | சொத்துக்களை பயன்படுத்துவதற்கு அல்லது வேறு நடவடிக்கைகள் தாமதமின்றி மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**3.3 நட்டங்களும் சேதங்களும்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாவட்ட செயலகத்தினால் 2017ம் ஆண்டில் நிர்மானிக்கப்பட்ட விடுதியொன்றை அமைத்தல் வேலைக்காக ரூபா. 217,994 மேலதிகமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | மேலதிகமாக கொடுப்பனவு செய்யப்பட்ட தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மேலதிக கொடுப்பனவை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | முறையான திட்டமிடப்பட்டு வேலைகள் மேற்கொள்ளப்படாமையால் மாவட்ட செயலக கட்டிடத்தை மீண்டும் மாற்றுவதற்கு நேர்ந்தமையால் ரூபா 250,220 வான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | பொருத்தமான இடமின்மை பெரும் பிரச்சினையாக உள்ளது. எனவே கீழ்த்தளத்தினை அலுவலகப்பாவனைக்கு உட்படுத்துவதற்கு முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் அனுமதியளிக்கப்பட்டது. | வேலைத்திட்டங்களானது முறையாக திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

**3.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தினால் விளான்குளி கிராம அலுவலகர் பிரிவில் வீடு நிர்மானிப்பதற்காக 2015 ஆம் ஆண்டுஇரண்டு பயனாளிகளுக்கு ரூபா 1,000,000 வழங்கப்பட்ட போதும் வீடுகள் பூரணமாக நிர்மானிக்கப்படாததுடன் பயனாளிகள் அந்த வீடுகளில் குடியேறியிருக்கவில்லை. | உரிய வேலையினை முடிவுறுத்துமாறு அல்லது வழங்கப்பட்ட கொடுப்பனவினை அரச கணக்கில் வைப்பிலிடாவிட்டால் தேவையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | உரிய வேலையினை முடிவுறுத்துவதற்கு அல்லது வழங்கப்பட்ட கொடுப்பனவினை மீண்டும் அறவிட தாமதமின்றி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.5 செயற்பாட்டு பலவீனங்கள்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலக அலுவலக வளாகத்தில் நிர்மானப்பணிகளுக்காக 2022 யூன் 20 ஆம் திகதியில் ரூபா 72,565,061 செலுத்தப்பட்டிருந்த போதும் வேலைக்கான மொத்த மதிப்பீடு, நகர அபிவிருத்தி அதிகார சபைச்சட்டத்திற்கமைவாக அனுமதி, வாஸ்து விஞ்ஞானபூர்வ மற்றும் கட்டமைக்கப்பட்ட திட்டம் | எதிர்வரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் தவிர்க்கப்படுவதற்கு கட்டிடங்கள் திணைக்களத்தினூடாக பெரிய மூலதன வேலைகளினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சட்டங்கள், விதிகள் மற்றும் தொழினுட்ப அறிவுரைகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

(Architectural and Structural Drawings) போன்ற எதுவும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4. மனிதவளமுகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணி 667 இல் 2021 திசெம்பர் 31 இல் 162 ஆளணிவெற்றிடங்கள் காணப்பட்டது. | வெற்றிடங்கள் நிரப்புவதற்கான நடவடிக்கை அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | தேவையின் பிரகாரம் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் |